திருப்பாசூர்ப் புராண சங்கிரகம்

(வசனம்)

வித்வான்

கா. ர. கோவிந்தராஜ முதலியார்

அவர்கள் மாணவரும்,

தொண்டை மண்டலம் துளுவ வேளாளர்

உயர்தர கலாசாலைத் தமிழ்ப் புலவரு மாகிய,

திரு. சா. அமிர்தலிங்கம்

இயற்றியது.

சென்னை சூளை,

சிவ ராம அச்சுக்கூடத்தில்

பிரசுரிக்கப்பெற்றது.

1926.

[விலை அணா 2¼

THE STORY

OF

TIRUPASUR

BY

T. S. AMIRTHALINGAM,

TAMIL PANDIT,

Tondaimandalam High School,

Madras.

SIVA RAMA PRESS, CHOOLAI.

1926

 [Price 2½ As.

முகவுரை.

இப்புத்தகம் பல்லோர்க்கும் பயன்படும்படி முதல் நாலிலிருந்து விடயங்களைச் சுருக்கி எழுதப்பட்டிருக்கின்றது. இதன் முதனூற்கள் திருப்பாசூர்ப் புராணமும், பாசூர்ப்புராண வசனமுமேயாம். இவை பெரிய புத்தகங்களாகவும், விலை யதிகமாகவும் இருக்கின்றமையால், எளிய மக்களும் இத்தலத்தின் மகிமையை யுணர்ந்து பயனை நுகருமாறு இந்நாலை எளிய தமிழில் செம்பாகமாக யான் எழுதி யிருக்கின்றேன். இப்பாசூர்த் தலம் திருஞான சம்பந்தர், திருநாவுக்கரசர் முதலியோரால் பாடப்பெற்று விளங்குகிறது. யான் அவர்களுடைய பாக்களையும் விட்டுவிடாது, தலத்தின் தலைப்பிலும், மூர்த்தியின் முன்னேயும், கூறியதன்றி இப்புத்தகத்தின் இறுதியிலும் கூறியுள்ளேன்.

யான் திருப்பாசூர்க்குப் பன்முறை சென்றிருக்கிறேன். செல்லுந்தோறும் வாசீஸ்வரர் மீது ஆர்வமே மிட்டுப் பக்தி தோன்றி என்னை வயப்படுத்திவிட்டது. அதனால் எனக்குண்டான பலனை எடுத்தியம்புக வொண்ணாது. இவ்விதப் பலனை யான் அடைந்ததுபோல ஏனையோருங் கொண்டுய்யுமாறு அவர் மகிமையைச் சிறு புத்தகமாக எழுதவேண்டும் என்னும் எண்ணம் நெடுநாட்களாக எனக்கு இருந்தது. அது பலவிதக் குறையால் நிறைவின்றித் தடைப்பட்டுக்கொண்டே வந்தது.

இஃது இவ்வாறாக, எனது அன்பார்ந்த மைத்துனரும், சிவபக்தியி லீடுபட்டவரும், அடக்கம்,

பொறை, கருணை, முதலிய நற்குணங்களுக்கோர் இருப் பிடமானவருமாகிய சைவ ஸ்ரீ கா. நாராயணசாமி முதலியார் அவர்கள் திருப்பாசூர் நாதர்க்குத் தம் மனத்தை அர்ப்பணமாக்கித் திருப்பாசூர்ப் புராணத் தைச் சங்கிரகமாக எழுதும்படி யென்னைச் சமீப காலத் தில் கேட்டுக் கொண்டனர். அடியேன் விழைவும் அவ் வாறே இருந்ததாதலின் இச்சமயம் தவறிவிடின் மற்றச் சமயம் வாய்க்கப் பெறுமோ என்று உன்னி, அவர் கேட்டுக் கொண்டபடி யென் சிற்றறிவிற்கு எட்டின மட்டும் இப்புத்தகத்தை எழுதத் துணிந்தேன்.

விழைவால் எழுதிய இப்புத்தகத்தின்கண் தோன் றும் சொற்பொருள்களாகிய குற்றங்களைப் பக்திமான் கள் பொறுத்துக் குணத்தைக் கொள்வார்களெனப் பிரார் த்திக் கின்றனன்.

" குணம்நாடிக் குற்றமும் நாடி அவற்றுள்
மிகைநாடி மிக்க கொளல் ".

யான் கொண்ட இந்நன் முயற்சி இடையூறு படா வண்ணம் தோன்றாத் துணையாக இருந்து அருள்புரிந்த முருகக் கடவுளை, மனமொழி மெய்களால் வணங்குகி றேன்.

திரு. சா. அமிர்தலிங்கம்.

தெய்வத்தைத் தொழும் விதம்.

நமரங்காள்!

நாம், உடல் அநித்தியம், பொருள் அநித்தியம் ஜகம் அநித்தியமென்று சகல சாஸ்திரங்கள் கூறுவதையுணர்ந்தும், கண்கூடாகக் கண்டுமிருக்கின்றோமன்றோ? "நேற்றிருந்தார் இன்றில்லை; நிமிஷத்துக்கு முன்னே யென்னுடன் அளவளாவினார், ஐயோ பாவம் நொடிக்குள் இப்படியா அவர்க்குச் சம்பவிக்க வேண்டும்," என்பதைக் கேட்டும், சொல்லியு மிருக்கின்றோ மல்லவா? இதை யொட்டியே நந்தம் தாயுமானவர், "இன்றைக்கிருப்பாரை நாளைக்கிருப்பர் என்றெண்ணவோ திடமில்லை," என்றார். இத்தகைய நித்தியமற்ற வாழ்க்கையை நாம் பெற்றிருக்கின்றோம். நாமே யன்றி நம்மைச் சூழ்ந்து கொண்டிருக்கும் நிற்பனவும், அசைவனவுமாய எல்லாப் பொருள்களும் அப்படியே ஆகும். இதைக் கருதியே ஔவையாரும், "பொருள்தனைப் போற்றி வாழ்," என்று திருவாய் மலர்ந்தருளினர் போலும். இதன் கருத்து நித்திய வஸ்துவாய கடவுளை நாம் தினம் தினம் போற்றி வாழ்வோமாக என்பதாகும். ஆதலால் நாமும், நம் பொருள்களும், உற்றார் பெற்றார் உடன் பிறந்தார் முதலியோரும் அழியக்கூடியவர்களே.

" அற்புதமா யிக்தவுட லாவியடங் குமுன்னே
சற்குருவைப் போற்றித் தவம்பெற்று வாழாமல்
உற்பத்திசெய்பொன் உடைமைபெரு வாழ்வைநம்பிச்
சற்பத்தின் வாயில் தவளைபோ லானேனே "

என்று புலம்புகின்றனர். இதைப்பற்றி நாம் சிறிதே னும் சிந்தியாதவர்களாய், நன் மார்க்கத்தை விட்டு உழைப்பிலேயே கண்ணுங் கருத்துமா யிருக்கின்றோம். என்னே அதிசயம்! 'கற்றோர் உலகம் பித்துடைத்து', என்கிறார்களே, அது சரியாக இருக்கிறது. அஞ்ஞா னத்தில் அமிழ்ந்து கிடக்கும் நமராங்காள்! இனியாகி லும் நாம் தேகத்தோடு, அன்பு, தயை முதலியவைகளைக் கொண்டு உழைப்பதிலேயும், பொருளீட்டுவதி லேயும் கண்ணுங்கருத்துமா யிராது, மோக்ஷாதிகாரியான பெரு மானை இடை யிடையே பூசித்து உய்வோமாக.

" அன்பின் வழிய துயிர்நிலை அஃதிலார்க்
கென்புதோல் போர்த்த வுடம்பு "


எனத் திருவள்ளுவ நாயனார் திருவாய் மலர்ந்தருளிய வண்ணம், இவ்வுலகின் கண்ணே மாந்தராகப் பிறந் துள்ள அனைவரும் அன்பின் வயப்பட்டன ரேயாம். இருப்பினும் இவ்வன்பை நிலைபேறுடைய இறைவனி டத்துச் செலுத்தாமல், தத்தம் மனைவி மக்கள் மாட்டும் செல்வத்தின் மீதும் செலுத்துகிறார்கள். எக்காலும் நிலைபேறுடைய கடவுள்மீது செலுத்தும் அன்பே நிலை பேறுடையதாகும். கடவுள் இடத்துக்காட்டும் அன்பே யென்றும் இன்பத்தை விளைவிப்பது. அதுவே இம்மை

மறுமைப் பயன்களை அடைதற்கு ஏதுவாயிருப்பது. அது தலையன்பு, இடையன்பு, கடையன்பு, என மூன்று வகைப்படும். மாந்தர் அனைவரும், தங்கள் தங்கள் முயற்சிக்கு ஏற்றவாறு அன்பை விருத்திசெய்ய முயல வேண்டும். அவ்வாறு அன்பை விருத்திசெய்யாமல் வாளாயிருந்தால் அவர்கள் உய்வது எங்ஙனம்? அங்ஙனம் உண்மை அன்பைச் செலுத்தினோர், யாவரும் பெறுதற்கு அருமையாகிய பரமனது பொருளைப் பெற்றுத், தங்கள் அந்திய காலத்தில் முத்தியடைவார்கள் என்பதில் யாதோர் ஐயுறவு மில்லை. ஆதலால் எப்பொழுதும் நிலைபெற்றிருக்கும் இறைவன் மாட்டுச் செலுத்து மன்பே சாலச் சிறப்புடையதாகும்.

அவ்வாறு கொண்ட அன்பை ஞானவான்கள் யோகம், தவம், முதலியவைகள் மூலமாக, ஓரிடத்திலிருந்து செலுத்துகின்றார்கள். மற்றைய நிலையிலுள்ளவர்கள் ஆங்காங்கு எழுந்தருளியுள்ள பரமனைப் பாடிப் பாமலர் தூவித்தொழுது இன்புறுகிறார்கள். நால்வர், தாயுமானவர் முதலாயினோர் பல இடங்களுக்குச் சென்று அன்பைச் செலுத்திப் பின் ஞானியாகி, ஓரிடத்தை யணுகி முத்தியடைந்தன ரன்றோ? தவிர, ஏழைகள் பலவகையினால் உய்யும் பொருட்டுக் கடவுள் ஆங்காங்குப் பல மூர்த்தங்கொண்டு எழுந்தருளி யிருக்கின்றனர். அவ்வாறே நாளது வரையில் பல பெரியோர்கள் சென்று க்ஷேத்திர தரிசனம் செய்து பல பேறுகளடைந்து வருகின்றனர். அவ்வித பல பேறு

களை யளிக்கும் க்ஷேத்திரங்களில் திருப்பாசூர் ஒன்றாகும். இது திருவள்ளூருக்கு வடக்கே இரண்டுமைல் தூரத்தில் உள்ளது. இங்குத் திருஞான சம்பந்தர் முதலியோர் போந்து, பசுபதி நாயகனையும், தங்காவளி யம்மையையும் தொழுது இன்புற்றுள்ளனர். ஆகலால், க்ஷேத்திர தரிசனம் செய்பவர்களும், அமாவாசி முதலிய சமயங்களில் திருவள்ளூரை யடைபவர்களும், நம் திருப்பாசூர் நாதனையும் கண்டு களித்துப் பேரின்ப வாழ்வை எய்துவார்களென எல்லாம் வல்ல பசுபதி நாயகனை என்றும் இறைஞ்சுகின்றேன்.

சுபம்! சுபம்!! சுபம்!!!



உ

முருகவேள் துணை.

திருப்பாசூர்ப் புராண சங்கிரகம்

(வசனம்).

கடவுள் வாழ்த்து.

"செக்கர் நெடுவானில் திங்க ணிலாத் துளும்பி
யுக்கதெனச் சடைமேல் உட்பார்நீர்—மிகவொழுகும்
வெள்ளத்தான் வெள்ளி நெடுங் கிரியான் மெய்யன்பர்
உள்ளத்தான் எங்கட் குளன்."

முன்னொரு காலத்திலே, நைமி சாரணியத்தில், ஞானத்திலும் அறிவிலுஞ் சிறந்து விளங்கிய முனிவர்கள் பலர் ஒன்றுகூடி இருந்தனர். அவர்கள் ஒரு நாள் சூத முனிவரைத் தொழுது, "முன்பு தேவரீர் திருவலிதாய க்ஷேத்திரத்தின் மகிமையினை எங்கட்கு நன்கு எடுத்து இயம்பினீர். அதைக் கேட்ட யாங்கள் பெருமகிழ் வடைந்து, திருப்பாசூரினது மகிமையினையும் அவ்வாறே கேட்டு இன்புற விரும்புகின்றோம். ஆகலால், தாங்கள் அத்தலத்தின் மகிமையையும் திருவாய் மலர்ந்தருள வேண்டும்," என்று கேட்டனர். அதற்கு, முனிவர் பெருமான் இயம்ப லுற்றார்.

"அந்தணர் மணியனே! யான் இன்று பெற்ற பாக்கியமே பாக்கியம். இத்தலத்தில் தேவர்கள் முதல் இயக்கர் ஈறாயுள்ள அனைவரும், இப்பதியில் எழுந்தருளிய சிவபெருமானை வணங்கி வீடு பெற்றனர். மேலும் அகில லோக நாயகியாகிய பார்வதியே இத்தலத்தில் எழுந்தருளியுள்ள தம் நாயகனாகிய பாசூர் நாதனை வழிபட்டன ரெனில், இத்தலத்தின் மகிமையை யாரே எடுத்துக்கூற வல்லார்," என்றனர்.

1. தீர்த்த விசேடம்.

சூதமா முனிவர் முனிவர்களை நோக்கி, „ஓ முனிவர்களே! இத்தலத்தின் கண் அமைந்துள்ள தீர்த்தத்தின் மகிமையைப் பற்றிச் சிறிது கூறுகின்றேன். கேளுங்கள். முன்னொரு காலத்தில் சுரர் ஒரு பக்கமும், அசுரர் ஒரு பக்கமும் இருந்து திருப்பாற் கடலைக் கடைந்தனர். அக்காலை, கவுத்துபமணி, சிந்தாமணி, சந்திரன் முதலியவை தோன்றின. அப்போது இரவி யிற் கூடிய சந்திரன், தனது முழு குளிர்ச்சியினையும் வீச ஆரம்பித்தனன். அக்குளிர்ச்சியினைச் சகிக்க முடியாத தேவர்கள், தத்தம் கை கால்கள் சுருங்கப் பெற்றனர். அதைக் கண்ட அக்கினி தேவன் தனது முழுச் சுவாலையை வீச, அவனும் அங்ஙனமே யாயினன். அதை யறிந்த தேவர்கள் மிகவும் பயந்து கருணையங் கடலாகிய சிவ பெருமானை யணுகி, சந்திரன் செய்யும் தீமையைக் கூறினர். அம்பிகை பாகர் தேவர்களுடைய வேண்டுகோளுக்கு இணங்கி, அச் சந்திரனைப் பிடித்துத் தம் சடா பாரத்திலுள்ள ஓர் உரோமத்தில் கட்டி யொருபுறம் தொங்கவிட்டு வைத்தனர்.

இங்ஙனம் சந்திரன் பலவருடம் தொங்கிக்கொண்டு இருந்ததால், அவன் தனது அவயவம் ஒவ்வொன்றும் நோதலை யறிந்து, கிருபா சமுத்திரமாகிய மங்கை பாகனை நோக்கி, "சர்வலோக நாயகனே! என் குற்றத்தைப்

பொறுத்தருளல்வேண்டும். ஏழை யெவ்விதம் இவ்வளவு காலம் துன்புறுவேன்?" என்று வேண்டினன்.

சர்வஜீவ தயாபரன் திருவுளமிரங்கி, 'சந்திரனே! உனது சகோதரர்களாகிய விண்ணவர்களுக்கு நீ இடையூறு செய்தனை. அது பெரும் பாவமாக உன்னைப் பற்றியது. அதனை ஒழித்துக் கொள்ளுதற் பொருட்டுப் புண்ணிய பூமியாகிய பரத கண்டத்தின் தென் நாட்டிலே, பல் வளங்களையும் இருகரைகளினும் கொழிக்கச் செல்வங்களை விருத்தி செய்து சிவனடியார்கட்கு உதவும் பாலாறு என்ற நதி ஒன்றுண்டு. அதன் வடக்கிலே, புண்ணியந் திரண்ட புண்ணியாவர்த்தம் என்னும் பதி ஒன்றுண்டு. அங்கு நீ போதல் வேண்டும். அங்கும் யாமே எழுந்தருளி இருக்கின்றோம். ஆகலால், எம்மைப் பூசித்து, உனது பாபத்தைப் போக்கிக் கொள்வாய்,' என்று கூறிச் சந்திரனைக் கட்டினின்றும் அவிழ்த்து விட்டனர்.

சடையி னின்றும் விடு பட்ட சந்திரன் பெருமகிழ்ச்சி யடைந்து பூமியிற் பல தரமும் விழுந்து எழுந்து பெருமானைப் பாடி, யாடி நேரே புண்ணியாவர்த்தத்திற்குச் சென்றான். அங்குத் தனது பெயரால் தீர்த்த மொன்று உண்டாக்கி அதற்குச் சோம தீர்த்தம், எனப் பெயரிட்டுத் தினந்தோறும் அதில் விதிப்படி குளித்து, அக்கடவுளை வழிபட்டு வந்தனன்.

இவ்வாறு சிலகாலம் சென்றது. அம்மையப்பனுக்குச் சந்திரன்பால் பெருங்கருணை உண்டானது.

அவர் அவனை ஆட்கொள்ள நினைந்து ஒரு நாள் சந்திரனை நோக்கி, 'உனக்கு வேண்டும் வரம் யாது?' என்று வினவினர். அதற்குச் சந்திரன், "சுவாமி! தேவரீரே எனக்குற்ற துணையாதலின், அடியேன் உமது திருவடிகளை என்றும் மறவா திருக்கத் தங்களுடைய சடாபாரத்தின் ஒரு பக்கத்தில் அமரும்படி எனக்கு வரமருளல் வேண்டும்," என்றனன். அதற்குக் கிருபாநிதியாகிய சங்கரர் அன்பு கூர்ந்து, சந்திரனைத் தமது திருமுடியில் தரித்துச் சந்திர சூடியாய் இன்றும் விளங்குகின்றார்.

மேற் கூறிய சோம தீர்த்தத்தில், மாசிமாதம், பௌர்ணமி அமாவாசி, சந்திர சூரிய கிரகணம், ஆகிய இப்புண்ணிய தினங்களில் உள்ளன்போடு ஸ்நானஞ் செய்பவர்கள், முன்னதாகத் தாம் செய்த பாபங்கள் அனைத்தும் நீங்கப் பெற்று சுவர்க்கத்தை யடைவார்கள். அன்றியும், ஒரு குடும்பத்தில் ஒருவரேனும் அத் தீர்த்தத்தில் நீராடுவாராயின் அவ் வமிசத்தில் பிறக்கும் அனைவரும் முத்தியை யடைவர் என்பதற்கு ஐயமில்லை.



2. தல விசேடம்.

"கையால் தொழுது தலைசாய்த் துள்ளங் கசிவார்கண்
மெய்யார் குறையுந் துயருந் தீர்க்கும் விகிர்தனூர்
செய்யா ரேதலஞ் சடையார் நிலாவு மூர்போலும்
பைவாய் நாகங் கோடலீனும் பாதூரே."

"பொங்கா டரவும் புனலுஞ் சடைமேற் பொலிவெய்தக்
கொங்கார் கொன்றை சூடியெ னுள்ளங் குளிர்வித்தார்
தங்கா தலியுந் தாமும் வாழு மூர்போலும்
பைங்கான் முல்லை பல்லரும் பீனும் பாதூரே."

"நீர்கொ ளிடையார் தலையின் மிசையார் செஞ்சொல்லார்
வந்தென் மாலை வைகும் போழ்தென் மனத்துள்ளார்
மைந்தா மணாள வென்ன மகிழ்வா ரூர்போலும்
பைங்கண் மாதவி சோலை சூழ்ந்த பாதூரே."

திருஞானசம்பந்த சுவாமிகள்.

எவரொருவர் இத்தலத்தின்கண் எய்தி ஏழைகளுக்கு அன்னம் அளித்தும், பசுக்களுக்குப் பசும்புல் அளித்தும் வருகின்றாரோ, அவர் அடையும் பலனை எவராலும் கூற வியலாது. இந்த ஒரே ஒரு வருடம், சிவராத்திரி விரதம் அனுஷ்டிப்பின், ஏனைய தலங்களில் ஒருகோடி சிவராத்திரி விரதம் அனுஷ்டித்த பலன்களைப் பெறுவர்.

இப்பாதூர் நாதர்க்கு அபிஷேகம் ஆராதனை செய்பவரும், மண்டபம், கோபுரம், மதில், முதலியன கட்டுபவரும், விழாக்கள் உபயமாக நடாத்துபவரும் இம்மையில் பெருஞ் செல்வத்தைப் பெற்று, மறுமையில் மோக்ஷப் பதவியை யடைவர் என்பது சத்தியம். இவையே யன்றி பிற நலன்களையும் அவர் பெற்றுய்வர்.

---

3. மூர்த்தி விசேடம்.

"முந்தி மூவெயி லெய்த முதல்வனார்
சிந்திப் பார்வினை தீர்த்திடுஞ் செல்வனார்
அந்திக் கோன்றனக் கேயருளா செய்தவர்
பாதிச் செஞ்சடைப் பாதி ரடிகளே."

திருநாவுக்கரசு சுவாமிகள்.

ஒரு காலத்தில் நான்முகன் தம்மினும் போரில் வல்லவர்கள் எவரேனும் உளரோ? என இறுமாப் புற்ற பொழுது அவருடைய இரண்டு பக்கங்களி னின்றும், மது, கைடவன், என்னும் பெயர்களை யுடைய இரண்டு அசுரர்கள் தோன்றி அவரைப் போருக்கு அழைக்க அப் பிரமன் பெரிதும் அஞ்சி அசுரர்களை நோக்கிப் பின் வருமாறு சொல்ல லுற்றார். "ஓ! அசுரர்களே! உங்க ளிடம் போர் செய்ய வல்லவர், திருப்பாற் கடலில் அறி துயில் கொள்பவராகிய திருமாலே யாவர். அவரிடந் நீங்கள் சென்று போர் புரிக," என்றனர். அரக்கர்கள் அவ்விடம் சென்று திரு நெடுமாலைத் துயிலி னின்றும் எழுப்பிப் போருக்கு அழைத்தனர். அவ் விஷ்ணுவும் நித்திரையினின்றும் எழுந்து அவ் வவுணர்களுடன் ஆயி ரம் வருடம், சண்டை செய்தும், அவுணர்கள் தோல்வி யடையா திருத்தலைக் கண்டு, அவர்களை நோக்கி, அவர் "வீர தீர சிகாமணிகளே! நீங்கள் போர்புரிதலிற் பெரும் பயிற்சி வாய்ந்துள்ளீர்கள், உமது போரின் திறத்தை

நான் மிகவும் மெச்சுகின்றேன். நீங்கள் விரும்பும் வரம் யாது?" என்று கேட்டனர்.

அசுரர்கள் அம் மொழியைக் கேட்டு மிகவும் நகைத்து, "கரியவனே! உமது மொழி எங்கட்குப் பெரு வியப்பைத் தருகின்றது. முன் பின் பார்த்துப் பேசுதல் நலம். உமது வார்த்தையைக் கேட்டோர் எவரும் குலுங்கக் குலுங்க நகையாமலிரார். எங்களோடு யுத்தம் செய்ய வல்லமை யில்லாத நீர் எமக்கு வரங் கொடுக்கத் துணிந்தீர்? நீர் தப்பித்துக் கொள்வதற்கு இவ் வுபாயம் எடுத்தீர் போலும். நாங்கள் உமக்கு வேண்டிய வரங்களைத் தருகின்றோம் பெற்றுக் கொள்ளும்," என்றனர்.

மாயோன், இது தான் நல்ல தருணமென்று எண்ணி அசுரர்களை நோக்கி, "ஓ அசுரர்களே! நீங்கள் எனக்கு உண்மையாக வரந்தர வல்லீரோ?" என்று கேட்க, அசுரர்கள், "தர வல்லோம்; யாங்கள் அவ் விதஞ் செய்யாமல் தவறிடில் எங்களைப் பார்க்கினும் இழிஞர்கள் ஒருவரும் இரார். அதற்குப் பிரம தேவனே சாட்சி," என்று பதில் கூறினர். விஷ்ணு மூர்த்தி சமயமுணர்ந்து, "அசுரர்களே! நீங்கள் என் கையால் இறந்து போகத் தக்க வரம் அருளல் வேண்டும்," என்று கேட்டனர். அரக்கர்கள் திடுக்கிட்டு, "ஆ! என்ன! நாம் ஆலோசியாது இவர்க்கு வரந் தருவோம் என்று வாக்களித்து விட்டோமே! இனி மறுப்பதில் பயனில்லை."

"வாழ்வது வந்த போது மனந்தனில் மகிழவேண்டா
தாழ்வது வந்ததானால் தளர்வரோ தக்கோர் மிக்க
ஊழ்வினை வந்ததானால் ஒருவரால் விலக்கப் போமோ
ஏழையா யிருந்தோர் பல்லக் கேறுதல் கண்டிலீரோ?"

என்பதுபோல, வருவது வந்துதான் தீரும், "என்று தங்களுக்குள் கருதி—

"உமது விருப்பத்தின்படி செய்து கொள்ளும்," என்றனர். அனந்தசயனர் அவர்கள் இருவரையும் தமது நகங்களாற் கிழித்து எறிந்தனர். அப்பொழுது அவ்வரக்கர்களது உதிரம் ஆறுப் பெருகியது. கேடுற்ற அக்கொடியர் சாகாமல் கேசவனைப் பன் முறையும், பற்பல ரூபங்களைக் கொண்டு எதிர்க்கவும், அரியாற்றாயனது முகம் மிகவும் வாடிற்று.

அதைக் கண்ட சாந்தகுண சீலராகிய சாலி கோத்திர முனிவர் திருமாலை நோக்கி, "மாயவனே! அரக்கர்களைக் கொன்ற பிரமகத்தி தோஷம் உம்மைப் பிடித்தது. அது நீங்க இங்கு தோன்றுகின்ற சிவலிங்கப் பெருமானைப் பூசியும்," என்றனர்.

உடனே மேகவண்ணர் திருநீறு பூசி, உருத்திராக்கம் அணிந்து ஒழுக்கத்திற் சிறந்து, சிவாகமப்படி ஆண்டவனை அருச்சித்து, அவரது திருநாமங்களை அன்புடன் சொல்லி ஆராதித்தனர். அக்காலை உமா மகேசன் உமையாளோடுந் தோன்றி ஸ்ரீமந் நாராயண மூர்த்திக்குக் காட்சி தந்தருளினர். இவ்வரிய காட்சியைக் கண்டு

களித்த வாசுதேவர் பாசூர் நாதனை நோக்கி, "சுவாமி! அடியேன், இத் திருப்பதியிலேயே யெந்நாளும் வசித்துக் கொண்டு, காலையிலும், மாலையிலும் தேவரீரைத் தரிசித்து வரும்படி எனக்கு வரந் தந்தருளல் வேண்டும்," என்று கேட்டனர். அதற்குப் பாசூர்நாதர் மன மகிழ்ச்சியோடு அவ்வரத்தை அவர்க்கு அங்ஙனமே யீந்து அவரை மகிழ்வித்தனர். புருஷோத்தமரும் அதற்குத் தக்கபடி பாசூர் நாதனை மன மொழி மெய் களால் வழிபட்டு வந்தனர்.

இத்தகைய சிறப்பு வாய்ந்த இப்பாசூர்ப் பதியானது ஒரு காலத்தில் துஷ்டமிருகங்களாகிய சிங்கம், புலி, யானை, கரடி, சிறுத்தை, முதலிய மிருகங்கள் வசிக்கும் இடமாக இருந்தது. இது அநேகமாய் மூங்கிற் காடாகவே இருந்தது. இதன் ஒரு பக்கத்தில் பல வேடுவர்கள் நிலத்தைப் பண்படுத்திக் குடியேறி வாழ்ந்து வந்தார்கள். இவர்களுக்கு வேள்ளாரை என்னும் ஊரில் வசித்து வந்த குன்றன் என்பவன் தலைவனாக இருந்தான்.

குன்றன் முருகக் கடவுளிடத்து மிகுந்த பக்தியைச் செலுத்தி வந்தான். இவன் இவ்வாறு இருக்கையில், பிரம விஷ்ணுக்களும் கண்டறியாத அடிமுடியையுடைய அரவாபரணர் ஒரு திருவிளையாட்டைச் செய்யக் கருதி, ஒரு வெள்ளிமலையே வடிவெடுத்து வந்தாற் போல, இடப வடிவங் தாங்கி வேடரது தினை நிலங்களை அழித்தனர்.

வேடர்கள் தம் நிலங்கள் பாழ்பட்டிருப்பதை யறிந்து அவைகளை அழித்தவர் யாவரென அறியாமல் மயங்கினர். பிறகு அவர்கள் மாட்டின் குளம்பு நிலங்களில் பதிந்திருப்பதைக் கண்டு, அச்சுவடைப் பின்பற்றி அவ்வழியே தொடர்ந்து சென்றனர். அவர்கள் அவ்வெருதைத் தேடுகையில் அதன் அடிச்சுவடு அவ்வனத்தில் அல்லாமல், வேறு இடங்களில் காணாமையால் மயங்கி, "என் செய்வோம்! இது காறும் இத்தகைய இடையூறு நமக்கு நேர்ந்ததில்லையே! அவ்வெருதைக் கண்டு பிடிப்பது எங்ஙனம்? அதனைக் கொன்றாலல்லது நமக்குப் பிழைப்பு இல்லை. ஆதலால், இம்மூங்கில வனத்தின் ஒரு புறத்தில் ஒளித்திருந்து அதனைக் கொல்ல வல்லவன் நந்தம் அரசன் குன்றனே யாவன். நாம் வெள்ளாரைக்குச் சென்று அவனை அழைத்து வருதலே தகுதி," என்று தீர்மானித்து அவர்கள் அவ்வூர்க்குச் சென்று அவனை நோக்கி, "அரசரே தாங்கள் எங்களுடன் இல்லாமையால், உண்மையில் எங்கள் கூட்டம் பாழடைந்து இருக்கிறது.

"சந்திர னில்லா வானந் தாமரை யில்லாப் பொய்கை
மந்திரி யில்லா வேந்தன் மதகரி யில்லாச் சேனை
சுந்தர புலவ ரில்லாத் சொல்சபை சுதரில் வாழ்வு
தந்திக ளில்லா வீணை தாலியில் மங்கை போலாம்."

எனப் பற்பல நீதிகளைப் புகன்று அவனை அழைத்தார்கள். அவ்வேடுவத் தலைவனும் அவர்கள் வேண்டுகோளுக்கு இசைந்து வேட்டைக்குச் சித்தமாகி அக்காட்டை அடைந்தான்.

அப்பொழுது அவ்வெருது சிங்கம் போல் முக்காரமிட்டுப் பூமி பள்ளமாகும்படி குளம்பினாற் கிளறித் தினைக் கொல்லை முழுவதையும் அழித்தது. அதனைக் கண்ட வேடுவர்கள் பலரும் பெரிதுங் கோபித்து அவ்வெருதினிடத்தில் நெருங்க அஞ்சித் தங்கள் இறைவனிடம் கூறினர். அவன் மிகவும் கோபம் கொண்டு அக்காட்டினை நான்கு பக்கங்களிலும் காவல் செய்து, அதன் மீது அம்புகளை யெல்லாம் மழையைப் போல் பொழிந்தனன். உடனே இடபம் முக்காரமிட்டு மறைந்து விட்டது.

குன்றன் அவ்வெருதைக் காணாமல் மனம் சலித்து கோபித்து, "ஐயோ! இனி நாம் செய்வது யாது? இடபத்தை யாண்டுச் சென்று தேடியும் காண்கிலேமே," என்று மயக்கங் கொண்டு இருக்குங்கால், முருகக் கடவுள் அவன் முன் தோன்றி, "குன்றனே! இதோ தெரிகின்ற மூங்கிற் புதரினைச் சோதித்தால் அவ்விளவெருது அகப்படும்," என்று சொன்னார். இதைக் கேட்ட குன்றன் முதலாயினோர் அவ்வாறே தேட வெண்ணிய மாத்திரத்தில் வேலாயுதக் கடவுள் மறைந்தார்.

அங்ஙனம் மறைந்தவர் தங்கள் குல தெய்வமாகிய முருகக் கடவுளே என்று வேடர் உணர்ந்து மூங்கில்களை அழிக்க ஆரம்பித்தனர். அவற்றுள் ஒரு பெரிய மூங்கில் வேரோடு சாய்ந்து கீழே விழுந்தது. அப்போது அதன் அடியில் சிவபெருமான் சிவலிங்க ரூபமாய்

எழுந்தருளினார். அச்சிலையைத்தந்தை வேடுவர் அதனை வணங்கித் தரிசித்து ஆநந்தக் கண்ணீர் சொரிந்தனர். மூங்கிலின் பிளந்த பகுதியாக முளைத்த பெருமான் ஆகலால், இவருக்கு வேயின்ற முத்தன், என்னும் அருமைத் திருநாமம் இன்றளவும் வழங்கி வருகின்றது. இதன்றியும் வாசீஸ்வரர் என்கின்ற மற்றொரு பெயரும் வழங்குகின்றது.

இத்தலத்தில் பக்தியோடு பெருமானுக்குத் தொண்டு செய்து முத்தியடைந்தவர் மங்கலமுனி, சோமன் முதலாயினோர். காஞ்சிமா நகரத்தைத் தலை நகராகக் கொண்டு சோழ நாட்டை அரசாட்சி புரிந்து வந்த கரிகாலச் சோழன் இப்பாசூர் நாதர்க்கு ஆலயங் கட்டி விழாக்கள் பல நடாத்தி அறுகால பூசையும் அன்புடன் செய்து வந்தான். அவன்,

" மாநிலங்கா வலனாவான், மன்னுயிர் காக்குங்காலைத்
தானதனுக் கிடையூறு தன்னால், தன் பரிசனத்தால்,
ஊனமிகு பகைத்திறத்தால், கள்வரால், உயிர்தம்மால்
ஆனபயம் ஐந்துந் தீர்த்து அறங் காப்பான் அல்லனோ?"

என்னும் பெரியோர் வாக்கிற்கு இலக்காக இருந்தான்.

பன்னர் மன்னனாகிய கரிகாலன் ஒரு நாள் தன் அரசவையில் இருந்த சேனாதிபதி ஒருவனை நோக்கி, "எனக்குத் தெரியாத வேந்தர் இவ்வுலகத்தில் எவரேனும் உளரோ?" என்று வினவினன். அதற்கு அச்

சேனைத் தலைவன், "அரசர் பெருமானே! மோகூர் என்னும் பட்டணத்தில் குறும்பன், என்னும் பெயரினை யுடைய அரசனொருவன் உளன்," என்றனன்.

அதைக்கேட்ட சோழன் "ஆ! ஆ! நாம் இவ் வுலகினை ஆளும் விதமென்னை!" என்று கூறிச் சினந்து, "இதுகாறும் எமக்கிச் செய்தியை நீங்கள் அறிவியாதிருந்த தென்னை?" என்று மந்திரிகளைக் கேட்டனன். மந்திரிகள் பயந்து காவலனது அடியை வணங்கி, "எங்களை ஆண்டருளும் மன்னர் பிரானே! கருணை கூர்ந்து எங்கள் வார்த்தைகளைக் கேட்டருளுமாறு வேண்டுகின்றோம். மோகூரை ஆளும் குறும்பன் ஒருவராலும் அழிக்கப்படுவ னல்லன். அவன் விநாயக மூர்த்தி, சுப்பிரமணியக் கடவுள், பயிரவமூர்த்தி, காளிகாதேவி, ஆகிய இந் நால்வரையும் அநேககாலம் மெய் யன்புடன் பூசித்ததால் அந்நால்வரும் அவனுக்குத் தோன்றி, பலவரிய வரங்களையும் ஈந்திருக்கின்றனர். குறும்பன் அந் நால்வருக்கும் ஆலயங்கள் வகுத்து, அவற்றில் அவர்களை யெழுந்தருளச் செய்து, தனக்கு ஒருவரும் நிகர் இல்லை யென அத் தெய்வங்களின் வருளால் ஆண்டு வருகின்றனன். அவன் அந் நால்வர் இடத்தும் பெற்றவரத்தின் திறத்தைக் கண்டு தேவரீருக்கு இயம்பாமல் இருந்தனம்," என்றனர்.

அவ்விஷயங்களைக் கேட்ட கரிகாலச் சோழன் குறும்பன் மீது போர் புரியக்கருதி, சேனைகளைத் திரட்டிச் சென்றனன். இச் செய்தியைக் கேள்வியுற்ற குறும்

பன் தனது கோட்டை வாயில்களைக் காத்துக் கொண்டு இருக்கும் தேவர்களை வேண்ட, அவர்களும் யுத்தத் திற்குப் போகச் சந்தோஷத்துடன் அவனுக்கு உத்தர வளித்தார்கள். தெய்வ வரத்தைப் பெற்ற குறும்பன் ஆநந்தம் கொண்டு யுத்தத்திற்குச் சென்று கரிகாலச் சோழனுடன் யுத்தஞ் செய்தான். அச்சண்டையில் சோழனது படைகள் குறும்பனது படைகளை முறி யடித்தன; அக்குறும்பனையும் வெருட்டித் துரத்தின. உடனே அவன் தனது தேவர்களை வணங்க, காளிகா தேவி வீரா வேசத்துடன் கிளம்பிச் சோழனது படை களை உதிரம் பெருகக் கொன்று வென்றாள்.

இதைக் கண்ட சோழன் பெரிதும் அச்சமுற்று வேயிடங் கொண்ட நாதனிடஞ் சென்று நடந்தவற் றைச் சொல்லித் தொழுதான். அப்பொழுது ஆகாயத் தில் அப்பெருமான் அசரீரியாய் நின்று சோழனை நோக்கி, "சோழ! நினது பெருஞ் சேனையுடன் மறு முறை சண்டைக்குச் செல். உன்னுடன் யாமும் ஓர் அஸ்திரமாகி வருவோம். ஆகாயமார்க்கமாக யாம் வருதலை எமது இடபக் கொடி முழக்கிக் காட்டும்," என்று கூறினர்.

இதைக் கேட்ட அண்ணல் ஆநந்த சாகரத்தில் மூழ்கி, "அன்பர்களது இன்னலைப் போக்கும் ஆண்ட வனே! மூங்கில் அடியில் முளைத்த மூவா முதல்வனே! முத்தி யளிக்கும் முக்கட் பரமனே!" என்று கூறித் தன் இரு கரங்களையும் சிரமேல் குவித்து உடல் நடுங்க வாய்

குழகப் பெருமானை நோக்கி—

"அருமறைப் பொருளே! ஆடகச் சபையில்
அருந்தவர் மகிழ்ந்துற நோக்கத்
திருநடஞ் செய்யுந் தேவனே! தேடத்
திரைகடல் மதித்தநாள் தோன்றும்
கருவிடமுண்ட கண்டனே! உந்தன்
கால்மலர் துதித்திட அறியேன்;
மருவலர் இதழித் தொடையனே! கயிலை
வள்ளலே! எம்பெருமானே!

"அத்தனே! அம்மே! அமலனே! அடியார்க்
கெளியனே! ஆரணப் பொருளே!
சித்தனே! சிவனே! மெய்ம்மைப் பொருளே!
திரிபுரம் எரித்தருள் சிவனே!
நித்தமும் நினைப்பார் கருத்துள்ளுறை பவனே!
நிருபனே! கயிலைக் கிரிவாழ்
வித்தகனே! கருணா கரனே!
கடையனை ஆதரித் தருளே."

என்று பலவாறு துதித்து அடியேனுக்குச் சேனைகள் பல அருள வேண்டும்," என்று இறைஞ்சினான். அப்போது ஆண்டவன் அருளினால் பல சேனைகள் அவனை வந்தடைந்தன. அவைகளைக் கண்ணுற்ற காவலன் தன் படைகளையும் சேர்த்துக் கொண்டு கருணைக் கடலாகிய பாசூர் நாதன் அளித்த இரதத்தில் ஏறிச் சென்று, காளியுடன் போர் புரிந்து அவனைப் பாசத்தால் இறுக்கிக் கட்டிக் குறும்பனது சிரத்தினைக் கொய்து, அவனது பொருள்கள் அனைத்தையும் கொள்ளை

கொண்டனன். பின்னர்ச் சோழன் காளியைப் பாசத்துடன் பாசூர் நாதரிடத்து அழைத்துச் சென்று, அவரது ஏவலினாலே அவளை விலங்கிட்டு, அக்கோவிலில் சிறை வைத்து, என்றும் பாசூர் நாதரைப் பணிந்து வந்தனன்.

இஃது இவ்வாறாக, திருப்பாசூரின் வடக்கே சமணர்பாடியில் கச்சியூர்க் குறும்பன் என்னும் சமணன் ஒருவன் இருந்தான். அவன் காளியைச் சிறையிலிட்டதைக் கேள்வியுற்று, அக்கரிகால் சோழனைத் தந்திரத்தால் வெல்ல வேண்டுமெனக் கருதிச் சில சமணர்களை யழைத்து, "சமணர்காள்! சோழனைக் கொல்லுதற் பொருட்டு ஒரு மந்திர யாகம் செய்வீர்களாக," என்றனன். அதைக் கேட்ட சமண மாக்கள் அங்ஙனமே வேள்வி யொன்று இயற்றினார்கள். அவ்யாகத்தினின்றும் ஏழு நாவினையுடைய ஓர் அக்கினி தோன்றி, "இங்கு என்னை அழைத்த காரணம் யாது?" என வினவலும், சமணர்கள், "நம் காளியைச் சிறையி லிட்ட கரிகால் சோழனைக் கொல்ல வேண்டும்," என்று கூறினார்கள். அக்கினி அவர்களை நோக்கி, "சோழன் நீதி தவறாத நேர்மை யுடையவன். அவன் குடிகளுக்குத் தாய் போன்றவன். சத்தியினையே வென்று சிறை வைத்தானென்றால், அவனது பராக்கிரமத்தை அளவிட முடியுமோ? சோழன் நீதி தவறாத நேர்மையுடையவனாகவின், வெற்றியடைந்தான்," என்று மொழிய, சமணர்கள் அவ்வக்கினியை ஒரு பாம்பாகுமாறு வேண்டிக் கொண்டார்கள். அஃது அங்ஙனமே யாயிற்று

உடனே அம்பாளை அவர்கள் ஒரு பால் குடத்தி லிட்டுச் சோழநாடல் அனுப்பினார்கள்

அப்போது [illegible] சோழ [illegible] கனவில் தோன்றிக் [illegible], [illegible] கு [illegible] [illegible] [illegible] கூறினர். அவன் அந்த சோழன் விழித் [illegible], பெருமானின் [illegible] [illegible] [illegible], குழவியை [illegible] பால குடத்தை [illegible] முயன்றனன். முயனும் [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible], [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] புகழ்ந்து [illegible] [illegible] [illegible].

[illegible] ! அனைவரும் அனைத்து மாய்தனிர்
[illegible] !
[illegible] ! மரகத வல்லி யானொரு
[illegible] ! பவளமாம பழ ரூபியே !

[illegible] கேளிடம் !
செயவாம் மரகதச் செல்வி பாகனே !
[illegible] ! [illegible] வாய்மெலாம்
மெய்யனே ! எதுவாய் விளக்கும் சோதியே !

முகமாறும் [illegible] முகிந்த மூஞ்சும்
சக்கர வதனமுக் [illegible]
வைக்கபல் மரகத வல்லி வாழ்வுற
செக்கர்மேல் வடிவமுக் [illegible] வாழியே."

இவ்வாறு பலபல பாடல்களைக் கொண்டு மனம் கசிந்து சுவையைப் புகழும் அருளொழுகிய சொற்களைக் கண்ட சோழன் வியப்பான சிரிப்புடன், "மன்னர் மன்னா! நாம் இன்று ஆரவம் ஆட்ட வந்தோம்," என்று, கரியால் சோழன் அப்பாம்பைக் கொணர்ந்து பெருமான் முன் வைத்தனன் : உடனே அடிகள் அப்பாம்பைக் கையிற் கொண்டு [illegible] விடுவித்தனர். அது ஒரு காத தூரம் போய் விழுந்தது. இன்றும் அதை [illegible] நகர் [illegible] ஸ்தலமாகச் செய்து [illegible] பெருமான் சிவாலயத்துள் புக்கனர்.

அவரது பெருமையையும் திறத்தையும் கண்ட கரிகால சோழன் பெருமான் பாட்டில் பேரன்புற்றவன் [illegible] சில நிலங்களை விட்டுக் கற்சிலையி னால் [illegible] நான்கு மாட வீதிகளையும் நன்கு அமைத்துப் பல பக்கங்களிலும் சிறந்த தோரணங் கட்டி, திருவிழாக்கள் பல நடத்திக் காலையிலும் மாலையிலும் அவரைத் துதித்து வருவானாயினன். இருந்த[illegible].

சிவபக்தியில் ஈடுபட்டும் அறத்திற் சோர் இருப்பிடமாகியும், புண்ணியந் திரண்டு விளங்கும் அறிவில் சிறந்த மானிடர்கள் ஜனன மரணமான சமுத்திரம், அஞ்ஞானமாகிய சலத்தைக் கொண்டு, அவாவாகிய அலைகள் வீசி, காமாதிகளாகிய முதலைகளைப் பெற்று இருக்கின்றது. இவ்வித நிலைமையுடைய பிறப்பானது சாபல்ய பாவதற்கு ஏற்ற வழியைத் தேட முயல

வது மானிடர் கடமை யாகும். ஆகலால், இப்பூவுல கின் கண்ணே மானிடராகப் பிறந்துள்ள அனைவரும், தங்களுடைய கறுத்த மயிரானது வெளுத்து, தேக மானது கூன் அடைந்து, பற்கள் ஆட்டம் பெற்று, காதுகள் செவிடு அடைந்து, கண்கள் பாழ் பட்டுப் போவதற்கு முன்னரே, பெருமான் மாட்டுப் பேரன்பு உற்று, ஆங்காங் கமைந்துள்ள சிவாலயங்களுக்குச் சென்று பூசிப்பின், நற்கதி அடையலாம் என்று உறுதியாகக் கூறலாம்.

அவ்வாறு அமைந்துள்ள சிவாலயங்களுள் திருப் பாசூரின் கண்ணே அமைந்துள்ள சிவாலயமும் ஒன் றாகும். இதன் கண்ணே வீற்றிருக்கும் நந்தம் திருப் பாசூர் நாதரது புகழை, அன்புருவாய்க் கண்ணீர்ப் பெருகத் துதிப்பவர் புண்ணியர் ஆவர்; அவ்வால யத்தை முறையாகப் பிரதக்ஷிணம் செய்பவர் பிறவித் துன்பங்களை அடியுடன் வென்றவர் ஆவர். பாசூர் நாதரை மனமொழி மெய்களால் பூசிப்பவர் எல்லா விர தங்களையும் குறை வில்லாமல் செய்தவர் ஆவர்.

"மட்ட விழ்ந்த மலர்நெடுங் கண்ணிபால்
இட்ட வேட்கைய ராகி யிருப்பவர்
கட்டோ லறியே னிவர் சூழ்ச்சிமை
பட்ட நெற்றியர் பாசூ ரடிகளே.

"பல்லி லோடுகை யேந்திப் பகலெலாம்
எல்லி நின்றிடு பெய்பலி யேற்பவர்
சொல்லிப் போய்ப்புகு மூரறி யேன்சொலீர்
பல்கு நீற்றினர் பாசூ ரடிகளே.

" கட்டி விட்ட சடையர் கபாலியர்
வட்டி கோக்கிவந் தில்புகுந் தவ்வவர்
இட்ட மாவறி யேனிவா செய்வன
பட்ட நெற்றியர் பாசூ ரடிகளே.

" விண்ணாகி நிலனாகி விசும்பு மாகி
வேலைசூழ் ஞாலத்தார் விரும்பு கின்ற
எண்ணாகி யெழுத்தாகி யியல்பு மாகி
யேழுலகுந் தொழுதேத்திக் காண நின்ற
கண்ணாகி மணியாகிக் காட்சி யாகிக்
காதலித்தங் கடியார்கள் பரவ நின்ற
பண்ணாகி யின்னமுதாம் பாசூர் மேய
பரஞ்சுடரைக் கண்டடியேன் உய்ந்த வாறே.

" நீராருஞ் செஞ்சடைமேல் அரவங் கொன்றை
நிறைமதிய முடன்சூடி நீதி யாலே
சீராரு மறையோதி உலகம் உய்யச்
செழுங்கடலைக் கடைந்தகட னஞ்ச முண்ட
காராருங் கண்டனைக் கச்சி மேய
கண்ணுதலைக் கடலொற்றி கருதி னானைப்
பாரோரும் விண்ணோரும் பரசும் பாசூர்ப்
பரஞ்சுடரைக் கண்டடியேன் உய்ந்த வாறே "

திருநாவுக்கரசு சுவாமிகள்.

முற்றிற்று.

நீதி மொழி

பரிவும் இடுக்கணும்
பாங்குற நீக்குமின்!
தெய்வம் தெளிமின்!
தெளிந்தோர்ப் பேணுமின்!
பொய் உரை அஞ்சுமின்
புறஞ்சொல் போற்றுமின்!
ஊன் ஊண் துறமின்!
உயிர்க்கொலை நீங்குமின்!
தானம் செய்ம்மின்!
தவம்பல தாங்குமின்!
செய்ந்நன்றி கொல்லன்மின்!
தீநட்(பு) இகழ்மின்!
பொய்க்கரி போகன்மின்!
பொருள்மொழி நீங்கன்மின்!
அறவோர் அவைக்களம்
அகலா(து) அணுகுமின்!
பிறவோர் அவைக்களம்
பிழைத்துப் பெயர்மின்!

பிறர்மனை அஞ்சுமின்!
பிழைஉயிர் ஓம்புமின்!
அறமனை காமின்!
அல்லவை கடிமின்!
கள்ளும் களவும்
காமமும் பொய்யும்
வெள்ளைக் கோட்டியும்
விரகினில் ஒழிமின்!
இளமையும் செல்வமும்
யாக்கையும் நிலையா.
உளநாள் வரையா (து)
ஒல்லுவ (து) ஒழியாது
செல்லும் தேஎத்துக் (கு)
உறுதுணை தேடுமின்!
மல்லன்மா ஞாலத்து
வாழ்வீர் ஈங்கென்.

இளங்கோ அடிகள்.

